2014 பிப்ரவரி 20]

தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதிவாய்ந்த சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் உரிய கல்வித் தகுதி பெற்றிருப்பின், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக, இதுவரை மூன்று முறை சிறப்புத் தேர்வு நடத்தி, இதுவரை 800 பணியாளர்களுக்கு ஆசிரியர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு, ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தகுதியானவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குப் பதவி உயர்வு அளித்து ஆசிரியர் பணியிலே நியமிக்கப்படுவது நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

88—

தொழிற்பயிற்சி நிலையம்

***24006—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகர் பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

89—

பயணியர் மாளிகை

__8606__—__திருமதி ர. சுபா:__

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லியில் பயணியர் மாளிகை கட்டுவதற்கு தற்சமயம் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதியானது தாலுகா தலைமையிடமாகும். எனவே, இங்கு புதிய பயணியர் மாளிகையை நெடுஞ்சாலைத் துறையின்மூலம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தில், ஆத்தூரில் பயணியர் மாளிகை அமைந்துள்ளது. ஆத்தூருக்கும்,*